# <u>Sub Court, Eraniel</u>

O.S. No.29/2023
Date: 18.02.2026.
DW1 - திருமதி. வசந்தம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி கிடையாது. என்னுடைய கணவர் தான் முதல் பிரதிவாதி. இந்த வழக்கில் வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது நானும் எனது கணவரும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தோம் என்றால், சரிதான். பின்னிட்டு சாட்சி வரவில்லை என்கிறார். எனவே எனது கணவர் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்லும் உடல் நிலையில் இருக்கிறார் என்றால், சரியல்ல. நான் கக்கோட்டுத்தலை பஞ்சாயத்தில் 2 முறை பஞ்சாயத்து தலைவியாக பதவி வகித்திருக்கிறேன் என்றால், சரிதான். எனது ஆதார் அட்டை முகவரி, A. வசந்தம், செக்காரவிளை, குருந்தன்கோடு அஞ்சல், கதவு எண்.9/77. இந்த வழக்கு பட்டிகை சொத்து, நாங்கள் வசித்து வரும் வீட்டில் இருந்து 1 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால், சரியல்ல. 100 அடி தூரத்தில் உள்ளது. தற்சமயம் அந்த வீடு குடியிருக்கும் அளவில் இல்லாத வீடு என்றால் அந்த வீடு பழுதடைந்த நிலையில் உள்ளது. பின்னிட்டு பழுதடையவில்லை என்று சாட்சி கூறுகிறார். அந்த வீட்டில் நாங்கள் வசிக்கவில்லை என்றாலும், வேறு இடத்தில் தான் நாங்கள் குடிவசிக்கிறோம் என்றாலும், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண்.6297. அந்த பழைய சர்வே எண்ணை Correlation certificate ன் அடிப்படையில் கூறுகிறேன். வழக்கு பட்டிகை சொத்தின் புதிய சர்வே எண். 736/12. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8 Correlation Certificate ல் பழைய சர்வே எண்.6297 A1 க்கு 736/4, 6,8,11,12, 13Part மற்றும் 14 part என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்து எங்களது குடும்ப பூர்வீக சொத்து. அதன் முதல் உரிமையாளர் ஞானப்பிரகாசம். அவருக்கும் பாரம்பரியமான சொத்து. ஞானப்பிரகாசத்தின் தகப்பனார் பெயர் நினைவில் இல்லை. ஆனால் பத்திரத்தில் படித்து பார்த்திருக்கிறேன். 1967 கிரய பத்திரத்தில், கூட்டாக இருந்த பத்திரத்தில் அவ்வாறு படித்து பார்த்திருக்கிறேன். எனது கணவருக்கு வழக்கு பட்டிகை சொத்து குடும்ப சொத்து என்ற முறையில் பாத்தியம். மற்ற பிரதிவாதிகள், எனது கணவரின் தம்பியின் பிள்ளைகள் என்ற முறையில் பாகப்பிரிவினையின் அடிப்படையில் பாத்தியம்

உள்ளவர்கள். அந்த பாகப்பிரிவினை 07.01.2008 ல் ஏற்பட்டது. 07.01.2008 க்கு முன்னாடி எனது கணவருக்கோ மற்ற பிரதிவாதிகளுக்கோ வழக்கு பட்டிகை சொத்து பாத்தியப்பட்டது என்று கரத்தீர்வை ரசீது மற்றும் பட்டா தாக்கல் செய்திருக்கிறேன். 2008 க்கு முன்னர் எந்த ஆவணமும் இல்லை என்று சாட்சி பின்னிட்டு கூறுகிறார். நான் தாக்கல் செய்த அனைத்து வருவாய் ஆவணங்களும், மேற்படி பாகப்பிரிவினைக்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.16 முதல் 20 ஆகியவை தவறான ஆவணங்கள் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பாகபத்திரத்தில் எனது கணவருக்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்று எவ்வாறு குறிப்பிட்டுள்ளது என்றால், சாட்சி நான் கண்ணாடி கொண்டு வராததால் படிக்க இயலாது என்று கூறுகிறார். வா.சா.ஆ.2, இதில் கட்சி சேராத A.ஆல்வின் சேவியல் அவர்களுடையவும், அவர்களுடைய பாட்டனாரான திரு. ஞானப்பிராகசம், அவர்களுடைய பூர்வீக குடும்ப வகையும் ஆகும். அதை அவர் கைவசம் வைத்து அனுபவித்து நடந்து வரவே காலம் சென்று போனதும், அவருடைய காலத்திற்கு பிறகு அவர்களுடைய அவகாசம் பின் தொடர்ச்சி என்று குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால், சாட்சி அதனை கேட்டு சரிதான் என்று குறிப்பிடுகிறார். அந்த ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்னால் 1980 முதல் வில்லங்கம் இல்லை என்று, வில்லங்க சான்று எடுத்து பார்த்தோம். பட்டிகை சொத்தில் 1957 ம் வருடத்திலேயே 2 சென்ட் சொத்து வாதியின் தாத்தாவின் பெயரில் கிரயம் கொடுக்கப்பட்டு உள்ளது என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 1957 கிரய ஆவணத்தில் எனது கணவர் இளவராக இருக்கும் போது எனது கணவர் மற்றும் கணவரின் தம்பி ஏனோக்கு ஆகியோர் பெயரிலும் வாங்கப்பட்டு கிரயம் அவர்களுடைய தாயார் மரிய மதலேனாள் என்பவரால், வாதியின் தாத்தாவான சிலுவைராயன் நாடாருக்கு கிரயம் கொடுக்கப்பட்டு உள்ளது என்றால், அது சரியல்ல. எனது மாமியார் மரிய மதலேனாள் அவ்வாறு எழுதிக் கொடுக்கவில்லை. ஏற்கனவே இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி கிரயம் பதிவு செய்யப்பட்டிருந்ததை மறைத்து, 2008 ல் எனது கணவர் மற்றும் அவருடைய தம்பி ஏனோக்கின் பிள்ளைகள் பெயரில் தவறுதலாக பாகப்பத்திரம் தயார் செய்து இருக்கிறார்கள் என்றால், சரியல்ல. அந்த ஆவணத்தில் 1957 கிரய ஆவணத்தில் 2 சென்டுகளுக்கு 4 பக்க எல்லைகளும், சரியான அளவீடுகளும் குறிப்பிட்டு 483/1957 கிரய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அந்த கிரய ஆவணத்தில் 4 பக்க அளவுகளை குறிப்பிடும்போது தெற்கு பக்க முடிவில்

கல்கட்டு இருப்பதாக குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. இந்த கிரய பத்திரத்தை நீக்கரவு செய்ய இந்த வழக்கிலோ, அல்லது வேறு வழக்கிலோ நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரிதான். 2022 வாதியின் தகப்பனார் வாதியின் பெயரில் எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவண எண்.3227/2022 னை ரத்து செய்வதற்கு நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் அடிப்படையில் மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டதா என்றால், வாதி விசாரணைக்கு ஆஜராகவில்லை அதனால் ரத்து செய்யவில்லை. வாதியை விசாரணைக்கு வருமாறு 01.03.2023 அன்று மனு அனுப்பப்பட்டது. அந்த விசாரணையில் நான் ஆஜர் ஆனேன். நான் கொடுத்த 2 மனுக்களுக்கும், அலுவலகத்தில் இருந்து பதில் தரவில்லை. கல்குளம் RDO அலுவலகத்தில் பட்டா ரத்து செய்வதற்காக நான் மனு கொடுத்தேன். அந்த மனுவில் எதன் அடிப்படையில் பட்டாவை ரத்து செய்தார்கள் என்றால், அது பி.வா.சா.ஆ.5 ன் படி, வாதியின் தாத்தாவின் பெயர் அ– பதிவேட்டில் சிலுவைராயன் மற்றும் அவருடைய மகன் மரிய ஜாண் ஜோசப் பீட்டர் மற்றும் அருள் ஜாண் ஆகியோரின் பெயர்கள் பதிவாகாத காரணத்தால் தான் பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால், சரியல்ல. அந்த விசாரணையில் வாதியின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணமோ அவருடைய தாத்தாவின் பெயரில் உள்ள கிரய ஆவணம் போலியானது என்று RDO குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. RDO உத்தரவுக்கு பிறகும் நான் மேற்படி கிரய ஆவணம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரிதான். வாதிதான், நானும் எனது கணவரும் அவருடைய தம்பி பிள்ளைகளுடன் சேர்ந்து தயார் செய்த பாகப்பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி இந்த வழக்கு செய்கிறார் என்றால், சரியல்ல. அது எங்களுக்கு உரிமைப்பட்ட சொத்து.

(வாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.